03.03.2021
O.S.No.212/2018

வா. சா. 1 ஜான் பன்னீர் செல்வம் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை(தொடர்ச்சி)

என் சகோதரருக்கு என் தகப்பனார் 11.8.1998 ம் தேதி எழுதிய தானப்பத்திரம் பின்னர் 5.7.2016 ம் தேதி தான ரத்து செய்ததாக உள்ள பத்திரம் ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் தான ரத்து பத்திரம் ஜெராக்ஸ் தாக்கல் செய்துள்ளேன். தான பத்திரத்தில் என் தகப்பனார் தனியாக கிரையம் வாங்கிய 1.1/2 ஏக்கர் மற்றும் உயிலுக்கு கட்டுப்பட்ட சொத்தையும் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் தம்பி எலக்ட்ரிசியன் வேலை செய்வதால் அரசு காண்ட்ராக்ட் எடுக்க சால்வென்சிக்கு கொடுக்க கேட்டார் என்றால் தெரியாது. அதன் அடிப்படையில் என் தகப்பனார் அவருக்கு முழுமையாக பாத்தியப்பட்ட சொத்தை எழுதிக்கொடுத்தார் என்றும் அதை ஆட்சேபிக்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக அ.வ.252/2002 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவண எண்.3 ஆக ஜெராக்ஸ் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு விசாரணை நடந்து தீர்ப்பானது. அதற்கான தீர்ப்புரை தாக்கல் செய்யவில்லை என்றால் நான் மனு செய்யவில்லை. அதனால் வாங்கவில்லை. சால்வென்சிக்காக எழுதிக்கொடுக்கப்பட்ட நிலையில் அவருக்கு பாத்தியப்பட்டது என்பதால் எதிர்வாதம் செய்துள்ளார் என்றும் அந்த விவரம் தீர்ப்புரையில் கண்டுள்ளது என்றும் அதனால்தான் தீர்ப்புரையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் இருதய நோயாளியாக 4 வருடமாக பேங்களூரில் இருந்தார் என்று ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் அவர் நல்ல நிலையில் சுய சிந்ததனையுடன் இருந்தால் என்றால் சரியல்ல. என் தகப்பனார் நல்ல நிலையில் இருந்ததால் உயில் சம்மந்தப்பட்ட சொத்து, அவர் கிரையம் பெற்ற சொத்து, ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்து சம்மந்தமாக 2013 மற்றும் 2016 ம்

வருடங்களில் உயில்கள் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் உயில் எழுதிய காரணத்தினால் அதுகுறித்து என் தகப்பனார் இறந்த பிறகும் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. வெளிநாட்டில் இருந்து வந்த பின்பு செய்துகொள்ளலாம் என்று இருந்தேன். வெளிநாட்டில் இருந்து வந்த பின் செய்துகொள்ளலாம் என்று இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு உயில் அடிப்படையில் சொத்துக்கள் சுயார்ஜிதமாக வந்ததால்தான் 45 வருடங்களாக அனுபவித்து வந்ததாலும் அவர் பேரில் பட்டா ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் தகப்பனார் என் தாயார் பேரில் 10 ஏக்கர் காடு வாங்கினார் என்றால் சரிதான். என் தகப்பனார் தான் கிரையம் பெற்ற நிலம் அடிப்படையிலும் ஆர்ஜிதம் செய்த நிலம் குறித்து பட்டா எண்.488, 524, 525, 191 ஏற்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. எதிர்வழக்குரையில் மேற்படி பட்டா எண்கள் குறிப்பிட்டது பற்றி சரிபார்க்க சிட்டா எடுத்து பார்க்கவில்லை என்றால் சரிதான். அப்பா பேரில் தனிப்பட்ட முறையில் பட்டா ஏற்பட்டதால் அதுகுறித்து சரிபார்க்கவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் அவருடைய அப்பா ஆண்மக்களுக்குத்தான் அவரது காலத்திற்கு பின் சொத்துக்கள் போகவேண்டும் என்பதற்காக என் மகன் நவீன் என்பவருக்கு வீட்டையும் கொஞ்சம் நிலத்தையும் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் 3 வருடமாக வெளிநாட்டில் இருக்கிறேன். நான் பி.எஸ்.என்.ஏ. பொறியியல் கல்லூரியில் வேலை பார்த்தேன். நான் பி.இ. எம்.இ., பிஎச்டி படிப்பு படித்துள்ளேன். நல்ல வருவாய் வருகிறது என்றால் என் சுய முயற்சியில் வருகிறது. என் தங்கைகள் இருவரும் போஸ்ட் கிராஜூவேட் படித்துள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் பாத்திமா கல்லூரியில் படிக்கவில்லை. கோவையில் படித்தார்கள். நான் பி.இ ஆர்விஎஸ். கல்லூரியில் படித்தேன். நான் பி.இ. படிக்க என் அப்பாதான் படிக்க வைத்தார். என்னை நல்ல முறையில் படிக்க வைத்ததாலும் என் தங்கைகளை நல்ல முறையில் படிக்கவைத்து திருமணம் செய்து வைத்துள்ளதாலும் என் தம்பி சரியாக படிக்காமல் இருந்ததால் அவருக்கு ஆதரவு செய்வதற்காக என் தகப்பனார் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை உயில்

எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என் தம்பி காண்ட்ராக்டராக உள்ளார். டிசிஇ முடித்து காண்ட்ராக்டராக உள்ளார். அதில் அவருக்கு நன்கு வருமானம் வருகிறது. தகப்பனார் என்ற கடமையில் தங்கைகளை நல்ல முறையில் படிக்க வைத்து என் தங்கைகளுக்கு தாவாச்சொத்தில் இடங்கள் கொடுத்து என் தங்கைகள் பல லட்சம் செலவு செய்து கட்டிடங்கள் கட்டியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. என் தம்பிக்கு தொழில் சரியாக இல்லை என்பதால்தான் சால்வென்சிக்காக எழுதிக்கொடுத்த தானப்பத்திரத்தை ரத்து செய்தார் என்றால் தெரியாது. 30.10.2010 ம் தேதி அனுப்பிய வாதசாஆ.4 அறிவிப்பை என் சகோதரர் போதுமான முகவரி இல்லை என்று வாதசாஆ.6 மூலம் திரும்ப வந்தது என்றால் சரிதான். அறிவிப்பை பெறாத காரணத்தினால் என் தம்பியால் உரிய பதில் அளிக்க முடியவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் அனுப்பிய அறிவிப்பில் என் தம்பி கேவியட் மனு அனுப்பியதாகவும், அதில் அப்பா உயில் எழுதி வைத்ததாக விவரம் உள்ளதாக சொல்லிஉள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் உயில் எழுதி வைத்தார் என்றும் பதிவு செய்த விவரமும் சொல்லப்படவில்லை. உயில் எழுதி வைத்ததாக சொல்லி உள்ள நிலையில் அது குறித்து வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நான் அனுப்பிய அறிவிப்பில் என் தம்பி 19 செண்டை 2 வது நபருக்கு விற்றது குறித்தும் 2 வது நபர் உள்ளே வரக்கூடாது என்றும் சொல்லி உள்ளேன் என்றால் 19 செண்டை பொறுத்துதான் அனுப்பினேன். பாகம் குறித்து கூறவில்லை. என் தகப்பனார் உயில் எழுதி வைத்த விவரம் தெரியும் என்றும் உயில்படி என் தம்பி அவருக்கு கிடைத்த சொத்தை அனுபவித்து வந்த விவரமும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் என் தாயாருடன் என் தாத்தா உயிலுக்கு சம்மந்தப்பட்ட பூர்வீக வீட்டில் இருக்கிறேன் என்றால் சரிதான். என் தம்பி அவருக்கு அப்பா எழுதிக்கொடுத்த உயிலில் கண்ட சொத்தில்தான் வீடு கட்டி குடியிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. உயில் நடைமுறைக்கு வந்து என் தம்பி அவருக்கு கிடைத்த சொத்தில் வீடு கட்டி குடியிருப்பது தெரியும் என்றும் அதை மறைத்து வீடு குறித்த விவரம் சொன்னால் வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் அதை

மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பாவுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் என் தகப்பனார் முறைப்படி உயில் மூலமாக பாத்தியப்படுத்தி உள்ளார் என்றும் அதன் பேரில் நான் பாகம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் பாகம் கோரும் இடத்தில் பல வீடுகள் கட்டப்பட்டுள்ள நிலையில் அதை மறைத்து வீடுகள் இல்லாதது போல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பாகம் கோரிய சொத்தில் ஏற்கனவே ஒரு பகுதியில் பாதைக்கு இடம் விடப்பட்டு அது குறித்த நபரை வழக்கில் சேர்க்காமல் பரிகாரம் கோராமம் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Sd. M.K.Jamuna,
Prl.Sessions Judge,
Dindigul